# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(~~Under Section 154 Cr.P.C.~~)
(~~கு.ந.வி.தொ.பிரிவு 154-இன் கீழ்~~)

**Under Section 173 BNSS**

C 8129892

1. District மாவட்டம் : கடலூர் PS: காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு **2024** FIR No.: மு.த.அ. எண் **9/2024** Date: நாள் **25.09.2024**

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 23.09.2024 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 14.30 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.09.2024 Time : நேரம் 0700 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - II Time : நேரம் 0700 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 3 கி.மீ. தென்கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி : கடலூர் தாலுக்கா அலுவலகம்,
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : G. அசோக்குமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : குணசேகரன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 33
(d) Nationality : நாட்டினம் : இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : ---
Date of Issue : வழங்கப்பட்ட நாள் : ---
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் : கம்பெனி ஊழியர்
(g) Address : முகவரி : எண்.36பி, சண்முகம் பிள்ளை தெரு, கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

செல்லதுரை, பிர்கா சர்வேயர், மேல் அழிஞ்சிப்பட்டு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

புகார்தாரர் கம்பெனியில் பணி இருந்ததால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

நான் இன்று 25.09.2024 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜரான கடலூர், எண்.36பி, சண்முகம் பிள்ளை தெரு என்ற முகவரியை சேர்ந்த குணசேகரன் மகன் அசோக்குமார் என்பவர், புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: 25.09.2024 அனுப்புநர் G.அசோக்குமார், (வயது 33), த/பெ.குணசேகரன், நெ.36பி, சண்முகம் பிள்ளை தெரு, கடலூர்-607001, பெறுநர் உயர்திரு. ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கடலூர், ஐயா, நான் கடலூர், சண்முகம் பிள்ளை தெருவில், வசித்து வருகிறேன். நான் கடலூர் சிப்காட்டில் உள்ள தனியார் கம்பெனியில் பணிபுரிந்து

(தொடர்ச்சி பக்கம்-3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed T.S.Sundravel Rank ...... Inspector of police to take up the Investigation / Refused Investigation / transferred to PS VLAC, Cuddalore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 25/09/2024 [signature] 25/09/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.09.2024 at 09.20 hrs.

Name: பெயர் P.ANBALAGAN
Rank: நிலை Inspector of police, VLAC, Cuddalore

வருகிறேன். எனது அண்ணன் சுரேஷ்குமார் என்பவர் எலக்ட்ரிஷியன் வேலை செய்து வருகிறார். எங்கள் இருவருக்கும் திருமணமாகிவிட்டது. நாங்கள் இருவரும் ஒன்றாக வசித்து வருகிறோம். கடந்த 20.08.2024 ஆம் தேதி நான் கடலூர் தாலுக்காவில் மேல்அழிஞ்சிப்பட்டு கிராமத்தில் உள்ள அங்காள பரமேஸ்வரி நகரில் 1200 சதுரடி உள்ள மனை எண் 11–ஐ என் மனைவி திவ்யா பெயரில் ரூ–1,50,000/–க்கு விலைக்கு வாங்கினேன். அதனை அன்றே கடலூர் இணை 1 நி சார் பதிவாளர் அலுவலகத்தில் என் மனைவி பெயரில் கிரையம் செய்துகொண்டேன். அதன் ஆவண எண்.3821/2024 ஆக பதிவாகியுள்ளது. மேலும் கிரையத்தின்போதே உட்பிரிவு கட்டணம் ரூ.400/–யும் அரசுக்கு செலுத்திவிட்டேன். என்னைப்போலவே எனது அண்ணன் சுரேஷ்குமாரும் அவரது மனைவி ரஞ்சிதா பெயரில் அதே நகரில் மனை எண்.10–ஐ விலைக்கு வாங்கி அவரும் அவரது மனைவி பெயரில் அன்றே கிரையம் செய்துகொண்டார். அதன் ஆவண எண்.3820/2024 ஆக பதிவாகியுள்ளது. மேலும் கிரையத்தின்போதே உட்பிரிவு கட்டணம் ரூ.400/–யும் அரசுக்கு செலுத்திவிட்டார். நாங்கள் இருவரும் உட்பிரிவு பட்டா மாற்றத்திற்கான கட்டணத்தை செலுத்தியிருந்தோம். இது நாள் வரை எங்கள் மனைக்கான பட்டா மாற்றம் எதுவும் செய்து தரவில்லை. இது சம்மந்தமாக நான் மேல் அழிஞ்சிப்பட்டு சென்று அந்த நகரில் மனை வாங்கியவர்களிடம் விசாரித்தபோது, இந்த கிராமத்துக்கான பிர்கா சர்வேயர் செல்லதுரை என்பவர் இருக்கிறார், கடலூர் தாலுக்கா அலுவலகம் சென்று அவரை சந்தித்து அழைத்துவந்து இடத்தை காண்பித்து அளவீடு செய்தால்தான் பட்டா மாற்றம் உங்களுக்கு கிடைக்கும் என்று சொன்னார்கள். அதன்பிறகு நான் 23.09.2024 ஆம் தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு கடலூர் தாலுக்கா அலுவலகம் சென்று அங்கிருந்த பிர்கா சர்வேயர் செல்லதுரை அவர்களை சந்தித்து மேல் அழிஞ்சிப்பட்டு கிராமத்தில் என் மனைவி பெயரில் மனை வாங்கியது குறித்தும் எனது அண்ணி பெயரில் மனை வாங்கியது குறித்தும் அவரிடம் கூறி, அந்த மனைகளுக்கு உட்பிரிவு பட்டா மாற்றம் செய்து தரவேண்டியும் அவரிடம் கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் என்னிடம் ஒரு மனை பட்டா மாற்றத்தில் ரூ.3000/– கொடுக்கனும் என சொன்னார். அதற்கு நான் அவரிடம் இரண்டு மனைகளுக்கும் பத்திரப்பதிவின்போதே பணம் செலுத்திவிட்டேன் என்று சொன்னேன். அதற்கு அவர், நீங்கள் கட்டிய பணம் அரசு கணக்கில் கட்டிய பணம். நான் கேட்குற

25/09/2024

தொகை, இடத்தை நேர்ல வந்து பார்த்து அளந்து பைல் தயார் செய்து, படம் வரைந்து மூன்று அதிகாரிகளிடம் ஒப்புதல் வாங்கி கணினியில் திருத்தம் செய்து தர எனக்காக கேட்ட தொகை என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் அதெல்லாம் எனக்கு தெரியாது, நீ கொடுக்கவேண்டிய பணம் ரூ.3000/– ஏற்பாடு செய்துகொண்டுவா, அதேபோல் உங்க அண்ணியிடம் விவரத்தை சொல்லி ரூ.3000/– கொண்டு வரச்சொல்லு என்று என்னிடம் சொன்னார். அதற்கு நான் அவரிடம் எனது அண்ணன் கூலிக்கு எலக்ட்ரிஷியன் வேலை செய்து வருகிறார். அவருக்கும் சேர்த்து நான்தான் கொடுக்கனும் என்று சொன்னேன். அதற்கு அவர் மொத்தமாக ரூ.6000/– கொண்டுவந்து என்னிடம் கொடு அப்போதுதான் பட்டா மாற்றம் செய்ய முடியும் என்று கறாராக சொல்லிவிட்டார். பின்னர் நான் எனது மனைவியிடமும், அண்ணியிடம் கலந்து பேசிவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் வீட்டிற்கு சென்று எனது மனைவி, அண்ணன் மற்றும் அண்ணியிடம், பிர்கா சர்வேயர் பட்டா மாற்றம் செய்வதற்கு ஒரு மனைக்கு ரூ.3000/– என்று இரண்டு மனைகளுக்கு ரூ.6000/– லஞ்சமாக பணம் கேட்ட விவரத்தை சொன்னேன். அதற்கு அவர்கள் என்னிடம் லஞ்சம் கொடுத்து பட்டா மாற்றம் செய்து கொள்ள விருப்பமில்லை என்றும், லஞ்சம் கேட்கும் சர்வேயருக்கு மீது நடவடிக்கை எடுக்க என்னையே லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் கொடுக்க சொன்னார்கள். எனக்கு கம்பெனியில் பணி இருந்ததால் என்னால் உடனடியாக புகார் கொடுக்க வரமுடியவில்லை. அதனால் நான் இன்று 25.09.2024 லஞ்ச ஒழிப்புத்து துறை அலுவலகம் வந்து என்னிடம் பட்டா மாற்றம் செய்வதற்காக ரூ.6000/– லஞ்சம் கேட்ட மேல் அழிஞ்சிப்பட்டு கிராமத்திற்கான பிர்கா சர்வேயர் செல்லதுரை மீது நடவடிக்கை எடுக்கவேண்டி தங்களிடம் புகார்மனு கொடுக்குறேன். மேலும் பிர்கா சர்வேயர் செல்லதுரை லஞ்சமாக கேட்ட பணம் ரூ.6000/– த்தை கொண்டுவந்துள்ளேன். இப்படிக்கு, (ஒப்பம்.xxxxxxx), 25/09/2024.

Sir,

Received the above computer typed complaint on 25.09.2024 at about 07.00 hrs., and preliminary verification was made on the genuineness of the complaint through sources and found to be

25/09/2024

genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.9/2024, U/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act, 2018 on 25.09.2024 at 08.30 hrs., sd/-xxxxx 25/09/2024 (P.Anbalagan), Inspector of Police, V & AC, Cuddalore.

25/09/2024
(P. ANBALAGAN)
Inspector of Police,
V & AC, Cuddalore.